**செய்திவெளியீடு எண்.24/2017** **நாள்:12.04.2017**

**சென்னைக் குடிநீர் வாரிய ஒப்பந்த களப்பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களைப் பயன்படுத்த பயிற்சி முகாம்.**

------

சென்னைக் குடிநீர் வாரியத்தில் பணிபுரியும் களப்பணியாளர்கள் மட்டுமின்றி ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் 522 களப்பணியாளர்களுக்கும் அவர்கள் களப்பணியில் ஈடுபடும் போது தகுந்த பாதுகாப்பு உபகரணங்களை அணிந்து கொண்டு பணியாற்ற வேண்டும் எனும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அவர்களுக்கான பயிற்சி முகாமிற்கு சென்னைக் குடிநீர் வாரியம் ஏற்பாடு செய்துள்ளது.

சென்னைக் கீழ்ப்பாக்கத்தில் அமைந்துள்ள சென்னைக் குடிநீர் வாரிய பயிற்சி மையத்தில் துவக்கப்பட்டுள்ள இந்த முகாம் 10 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு களப்பணியாளர்கள் அனைவருக்கும் பயிற்சி அளித்திடும் வகையில் 28.04.2017 வரை தொடர்ந்து நடத்தப்படும்.

கழிவுநீர் அமைப்புகளில் அதிநவீன இயந்திரங்களைக் கொண்டு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளும்போது அதற்கான பாதுகாப்பு உபகரணங்களை கண்டிப்பாக அணிந்து கொண்டு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.வி. அருண் ராய், இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள்.

அந்த உத்தரவின்படி அந்தந்த பகுதி பொறியாளர்களும் தங்கள் பகுதியின் கீழ் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் களப்பணியாளர்கள் தகுந்த பாதுகாப்பு உபகரணங்கள் அணிந்து பணி மேற்கொள்வதை தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள்.

கழிவுநீர் அமைப்புகளைப் பராமரிக்க மனிதர்கள் நேரடியாக கழிவுநீர் அமைப்புகளில் இறங்கி பணி செய்யக் கூடாது என்பதற்காக சென்னைக் குடிநீர் வாரியம் அதி நவீன இயந்திரங்களை கொள்முதல் செய்து அதனைக் கொண்டே பராமரிப்புப் பணிகளை உறுதியுடன் செயல்படுத்தி வருகிறது.

கழிவுநீர் அடைப்பை நீக்குதல், கழிவுநீர் கசடுகளை அகற்றுதல், கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபடும்போது களப்பணியாளர்கள் கழிவுநீர் அமைப்புகளில் நேரடியாக இறங்கி பணிகளை மேற்கொள்ளாமல் தடுப்பதற்கும், அதிநவீன இயந்திரங்களைக் கொண்டு பராமரிப்பது எப்படி என்பதற்கும், பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்தி இயக்குவதற்கும் உரிய சிறப்பு பாதுகாப்பு பயிற்சியினை சென்னைக் குடிநீர் வாரிய அனைத்து களப்பணியாளர்களும் இந்த பயிற்சி முகாமின் மூலம் பெற்று விழிப்புணர்வு பெறுவார்கள்.







மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்